15.09.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### மேட்டூர் அணைக்கு நீர்வரத்து குறைந்தது

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 15,790ல் இருந்து 13,090 கனஅடி ஆக குறைந்தது.

மேட்டூர் அணையில் இருந்து குடிநீருக்காக வினாடிக்கு 1,250 கனஅடி நீர் திறக்கப்பட்டுள்ளது. மேட்டூர் அணையின் நீர்மட்டம் 83.85 அடியாகவும், நீர் இருப்பு 45.90 டி.எம்.சி ஆகவும் உள்ளது.

### மார்கழிப் பட்ட கேழ்வரகு!



திருநெல்வேலி: தமிழ்நாடு வேளாண்மைத் துறை பரிந்துரைக்கும் தானிய வகைப் பயிர்களில் மார்கழிப் பட்டமாக கேழ்வரகு பயிரிட்டு லாபம் பெறலாம். ரகம், பருவம்: தமிழகத்தில் கன்னியாகுமரி, நீலகிரி தவிர அனைத்து

மாவட்டங்களிலும் அனைத்துப் பட்டங்களிலும் பயிரிடலாம். மார்கழிப் பட்டம்: டிசம்பர் - ஜனவரி மாதங்களான மார்கழிப் பட்டத்தில் கோ 9, கோ 13, கோ.ஆர்.ஏ14, டி.ஆர்.ஒய் 1 ரகங்களைப் பயிரிடலாம். சித்திரைப் பட்டம்: ஏப்ரல் - மே மாதங்களில் கோ 9, கோ 13, கோ.ஆர்.ஏ14 ரகங்களைப் பயிரிடலாம். மானாவாரியாக ஆடிப் பட்டத்தில் (ஜூன் - ஜூலை) பையூர் 1, கோ 13, கோ.ஆர்.ஏ14, பையூர் 2 ரகங்களைப் பயிரிடலாம். புரட்டாசிப் பட்டம்: செப்டம்பர் - அக்டோபர் மாதங்களில் பையூர் 1, கோ13, கோ.ஆர்.ஏ14 ரகங்களைப் பயிரிடலாம்.

நாற்றங்கால் தயாரித்தல் (நாற்றங்கால் பாசனம்): ஒரு ஹெக்டேர் வயலில் நடவுக்குத் தேவைப்படும் நாற்றுகள் வளர்க்க 12.5 செண்ட் (500 மீ) நாற்றங்கால் பரப்பு தேவை. 37.5 கிலோ சூப்பர் பாஸ்பேட்டுடன் 500 கிலோ தொழுஉரம் கலந்து நாற்றங்கால் பாத்திகளில் சீராகப் பரப்ப வேண்டும். இறக்கை கலப்பையால் 2 அல்லது 3 முறையோ, நாட்டுக் கலப்பையால் 5 முறையோ உழ வேண்டும்.

மேட்டுப்பாத்தி தயாரித்தல்: 3 மீ-க்கு 1.5 மீட்டர் அளவுள்ள 6 பாத்திகள் அமைக்க வேண்டும். ஒவ்வொரு பாத்திக்கும் நீர் பாய்ச்ச 30 செ.மீ. இடைவெளி அவசியம். இடைவெளியில் உள்ள மண்ணை 15 செ.மீ. ஆழத்துக்கு தோண்டி வாய்க்கால் அமைக்கவும். தோண்டிய மண்ணை பாத்திகள் மேல் போட்டு சமப்படுத்த வேண்டும்.

காளான் கொல்லி முன்விதை நேர்த்தி: அசோஸ்பைரில்லம் 3 பாக்கெட் ஒரு ஹெக்டேருக்கு, 3 பாக்கெட் பாஸ்போபாக்டீரியா கொண்டு விதைநேர்த்தி செய்ய வேண்டும்.

விதைத்தல்: விரலால் படுக்கையின் மீது கோடிட வேண்டும். அதன் மீது விதை நேர்த்தி செய்யப்பட்ட விதைகளைத் தூவ வேண்டும். கையால் மண்ணைத் தூவி விதைகளை மூட வேண்டும். 500 கிலோ தொழு உரத்தை பாத்திகளின் மேல் தூவிவிட்டு விதைகளை மூடி மேற்பரப்பை இளக்கமாக்க வேண்டும். ஆழமாக விதைத்தால் முளைப்புத்திறன் பாதிக்கப்படும்.

நீர் மேலாண்மை: ஒவ்வொரு நாற்றங்காலுக்கும் ஓர் உள்வாயில் அமைக்க வேண்டும். உள்வாயில் மூலம் தண்ணீர் விட்டு வாய்க்காலைச் சுற்றி தண்ணீர் விடவும். மேட்டுப்பாத்திகள் ஈரமாகும் வரை, வாய்க்காலில் தண்ணீர் விட்டு பின் நிறுத்திவிட வேண்டும். மண்ணின் வகையைப் பொருத்து நீர்ப்பாசன இடைவெளி

மாறுபடும். செம்மண்ணுக்கு 3ஆவது நாள் நீர்ப் பாய்ச்சி கடின மேற்பரப்பு லகுவாக்கப்படுகிறது. இதனால் நாற்றுகள் எளிதாக முளைக்கும். முறையாக, சீராக நீர்ப் பாய்ச்சி நாற்றங்கால் பாத்தியில் பிளவு ஏற்படாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

நாற்றுகளைப் பிடுங்கி நடுதல்: விதைத்த 17 அல்லது 20ஆவது நாளில் நாற்றுகளை, நடவுக்காக பிடுங்கலாம்.

நடவு வயலை தயார் செய்தல்: மண் நன்றாக கட்டிகளின்றி உடையும் வரை அச்சுக் கலப்பையால் 2 முறையும், மரக் கலப்பையால் 3 முறையும் உழ வேண்டும்.

உரம் அல்லது தொழுவுரம் இடுதல்: ஹெக்டேருக்கு 12.5 டன் தொழுவுரம் அல்லது மக்கிய நார் உரம் உழுவதற்கு முன் இடவேண்டும். நாட்டுக்கலப்பையால் உரங்களை மண்ணுடன் ஒருங்கிணைத்தல் வேண்டும். உரங்களை வயலில் நன்றாக பரப்பவில்லையென்றால் ஊட்டச்சத்துகள் வீணாகும்.

உரப் பயன்பாடு: மேற்கு, வடமேற்குப் பகுதிகளில் மண் பரிசோதனைப் பரிந்துரைப்படி உரங்கள் அளிப்பதால் பயிர் விளைச்சலில் இலக்கை அடையலாம்.

முடிந்தவரை மண் பரிசோதனைப்படி தழை, மணி, சாம்பல் சத்துகளை மண்ணுக்கு அளிக்க வேண்டும். மண்பரிசோதனை செய்யவில்லையென்றால் தழைச்சத்து 60 கிலோ, மணிச்சத்து 30 கிலோ, சாம்பல் சத்து 30 கிலோ என்ற அளவில் ஒரு ஹெக்டேருக்கு இட வேண்டும். நடவுக்கு முன் தழைச்சத்தில் பாதியளவும் சாம்பல்சத்தில் பாதியளவும் மணிச்சத்து முழுவதையும் சேர்த்து அடியுரமாக இட வேண்டும். உரக் கலவையை கடைசி உழவுக்கு முன் மண்ணில் இட்டு நாட்டுக் கலப்பையால் உழுது மண்ணுடன் உரக் கலவையை ஒன்றிணைக்க வேண்டும்.

படுக்கை, வாய்க்கால்: 10 ச.மீ-க்கு 20 ச.மீ என்ற அளவில் படுக்கை அமைத்தல் வேண்டும். மேலும், தேவையான அளவுக்கு பாசன வாய்க்கால் அமைக்க வேண்டும்.

நுண்ணூட்டக் கலவை: தமிழ்நாடு வேளாண் துறை அறிவுறுத்தல்படி 12.5 கிலோ நுண்ணூட்டக் கலவையுடன் போதுமான மண் கலந்து அதை ஹெக்டேருக்கு 50 கிலோ என்ற அளவில் அளிக்க வேண்டும். நுண்ணூட்டக்கலவையை பாத்திகளின் மீது சமமாக இட வேண்டும். கலவையை மண்ணில் இட்டு கலக்கக் கூடாது.

நாற்று நடுதல்: படுக்கை சமமாக இருந்தால் நீர் போக எளிதாக இருக்கும். ஒரு குத்துக்கு 2 நாற்றுகளாக நட வேண்டும். நாற்றுகளை 3 செ.மீ ஆழத்தில் நட வேண்டும். 18 முதல் 20 நாள் நாற்றுகளை நட வேண்டும் 30-க்கு 10 செ.மீ. இடைவெளியில் நட வேண்டும். நேரடி விதைப்பாக இருந்தால்

22.5-க்கு 10 செ.மீ. இடைவெளியில் விதைக்க வேண்டும். வேர்களை நனைக்க அசோஸ்பைரில்லம் சேற்றுக் குழம்பு தயாரிக்க வேண்டும். நாற்று நடும் முன் இந்தக் குழம்பில் 15 முதல் 30 நிமிடம் நனைக்க வேண்டும்.

களை நிர்வாகம்: விதைத்த 3 நாள்களுக்கு பிறகு களை முளைக்கும் முன் களைக்கொல்லி தெளிக்கவும். விதைத்த 20 நாள்களுக்கு பிறகு கையால் களையெடுக்க வேண்டும். மண்ணில் தேவையான அளவு ஈரப்பதம் இருந்தால் களைக்கொல்லி தெளிக்க வேண்டும். களை முளைக்கும் முன் களைக்கொல்லி தெளிக்கவில்லை என்றால் விதைத்த பிறகு 10, 20 நாள்களில் இருமுறை கையால் களையெடுக்கவும். வழிகாட்டுதல்படி நீர் நிர்வாகம் மேற்கொள்ள வேண்டும்.

அறுவடை: கேழ்வரகுப் பயிர் ஒரே சீராக முதிர்ச்சியடைவதில்லை. எனவே, இருமுறையாக அறுவடை செய்ய வேண்டும். 50 சதவீத கதிர்கள் பழுப்பு நிறமடைந்தபிறகு அதை அறுவடை செய்யலாம்.

முதல் அறுவடை: முற்றிப் பழுப்பு நிறமடைந்த அனைத்து கதிர்களையும் அறுவடை செய்யவேண்டும். தானியத்தைக் காயவைத்து கதிரடித்து தூற்றி சுத்தப்படுத்த வேண்டும்.

2ஆம் அறுவடை: முதல் அறுவடைக்குப் பிறகு 7ஆவது நாளில் அனைத்து தானியக் கதிர்களையும் பச்சையாக இருக்கும் கதிரையும் சேர்த்து அறுவடை செய்ய வேண்டும். அறுவடை செய்த தானியங்களை உலர்த்துவதற்கு முன் குவியலாக நிழலில் ஒருநாள் வைப்பதால் வெப்பநிலை அதிகரித்து தானியம் தரமாகும். உலர்ந்த தானியத்தைக் கதிரடித்து புடைத்து, சுத்தப்படுத்தி சாக்குப் பைகளில் சேமிக்க வேண்டும்.

## இறவைப் பயிராக உருளைக்கிழங்கு!



திருநெல்வேலி: மலைப் பகுதிகளிலும், சமவெளிப் பகுதிகளிலும் இறவைப் பயிராக உருளைக்கிழங்கை ஜனவரி, பிப்ரவரி மாதத்தில் பயிரிடுவதன் மூலம் நல்ல மகசூல், கூடுதல் வருமானம் பெறலாம் என, தோட்டக்கலைத் துறை அறிவுறுத்தியுள்ளது.

ரகங்கள்: குப்ரி ஜோதி, குப்ரி முத்து, குப்ரி சொர்ணா, குப்ரி தங்கம், குப்ரி மலர், குப்ரி சோகா, குப்ரி கிரிராஜ்.

மண், தட்பவெப்பநிலை: உருளைக்கிழங்கை வளமுள்ள எல்லா மண்ணிலும் பயிரிடலாம். களர் உவர் நிலங்கள் ஏற்றவையல்ல. மிகுதியான நிறமக்கு நிறைந்த இருபொறை நிலங்கள் ஏற்றவை. களிமண் நிலத்தைத் தவிர்க்கவேண்டும். வடிகால் வசதியுள்ள நிலங்கள் ஏற்றவை. குளிர், மித வெப்பப் பகுதிகளில் பயிரிடலாம். மண்ணின் கார அமிலத்தன்மை 4.8 முதல் 5.4 சதம் வரை இருக்கலாம். ஆண்டுக்கு 1,200 முதல் 2,000 மில்லி மீட்டர் வரை மழை பெறும் பகுதிகளில் பயிரிடலாம்.

நடவுப் பருவம்: மலைப் பகுதிகளில் கோடைக்காலமான மார்ச் - ஏப்ரல், இலையுதிர் காலமான ஆகஸ்ட் - செப்டம்பரில் பயிரிடலாம். இறவைப் பயிராக ஜனவரி - பிப்ரவரியில் பயிரிடலாம். சமவெளிப் பகுதிகளுக்கு அக்டோபர் - நவம்பர் உகந்தது.

நிலம் தயாரித்தல்: நிலத்தை நன்றாகக் கொத்தி, பண்படுத்தி 45 செ.மீ. இடைவெளியில் பார் பிடிக்கவேண்டும். மலைப் பகுதிகளில் 1.4 மீட்டர் அளவில் உள்நோக்கி சாய்ந்தவாறு சாய்வுத்தளம் அமைக்கவேண்டும். வடிகாலுக்கு வாய்க்கால்கள் அமைக்க வேண்டும்.

விதைத்தல்: ஹெக்டேருக்கு 3,000 முதல் 3,500 கிலோ கிழங்குகள் வரை தேவைப்படும். உருளைக்கிழங்கு சாகுபடியில் விதைத் தயாரிப்பை முக்கியமாக கவனிக்கவேண்டும். புதிய கிழங்குகள் முளைக்காது, ஆகவே முளைப்புத் தன்மையை ஏற்படுத்த கார்பன் டை சல்பைடை 100 கிலோ கிழங்குக்கு 30 கிராம் என்ற அளவில் பயன்படுத்தவேண்டும். கிழங்குகளை குவியலாக்கி குவியலின் மேல் ஓர் அகன்ற தட்டில் கார்பன் டை சல்பைடை ஊற்றி பாலிதீன் தாளால் மூடவேண்டும். கிழங்குகளில் முளை வந்தவுடன், நடவுக்குப் பயன்படுத்தவேண்டும். நிலத்தின் சாய்தளத்தைப் பொருத்து செடிக்குச் செடி 15-20 செ.மீ. இடைவெளியில் அவற்றை நடவேண்டும். நீர் நிர்வாகம்: நடவுக்குப் பின்னர் 10 நாள்களுக்கு ஒருமுறையும், பிறகு வாரம் ஒருமுறையும் நீர்ப்பாய்ச்ச வேண்டும். ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை: ஒரு ஹெக்டேருக்கு அடியுரமாக 15 டன் மக்கிய தொழு உரம், 2 கிலோ அசோஸ்பைரில்லம் அல்லது பாஸ்போபாக்டீரியம், 60 கிலோ தழைச்சத்து, 120 கிலோ மணிச்சத்து, 60 கிலோ சாம்பல் சத்து கொடுக்கும் ரசாயன உரங்களை அடியுரமாக இடவேண்டும். இதனுடன் 60 கிலோ மக்னீசியம் சல்பேட்டையும் அடியுரமாக இடவேண்டும். பிறகு விதைத்த 30 நாள் கழித்து 60 கிலோ தழைச்சத்து, 120 கிலோ மணிச்சத்து, 60 கிலோ சாம்பல் சத்து கொடுக்கும் ரசாயன உரங்களை மேலுரமாக இட்டு மண் அணைக்கவேண்டும்

உரப்பாசனம்: உருளைக்கிழங்கில் ஊட்டச்சத்தின் அளவு தழை, மணி, சாம்பல் சத்து முறையே ஹெக்டேருக்கு 120: 240: 120 கி.கி. என்ற அளவில் வழங்க வேண்டும். இதில் 75 கிலோ மணிச்சத்தை சூப்பர் பாஸ்பேட்டாக அடியுரமாக அளிக்க வேண்டும். அளவைப் பிரித்து பயிரின் ஆயுள்காலம் முழுவதும் 3 நாள்களுக்கு ஒருமுறை உரப்பாசனமாக அளிக்க வேண்டும். களைக்கட்டுப்பாடு: விதைத்த 60 நாள்களுக்கு களையின்றி பார்ப்பது அவசியம். விதைத்த 45, 60ஆவது நாளில் களையெடுத்து மண் அணைக்கவேண்டும். வெட்டுப்புழுக்கள்: இது உருளைக்கிழங்குப் பயிரில் 5 முதல் 10 சதம் வரை சேதமேற்படுத்தும். இப்புழுக்கள் எல்லாப் பருவத்திலும் தோன்றும். இப்புழு

கிழங்குகளில் துளையிட்டு மாவுப் பகுதியை உண்கிறது. இதனால் தாக்கப்பட்ட கிழங்கில் பெரிய குழிகள் உண்டாகி, நாளடைவில் கிழங்கு அழுகிவிடும்.

கட்டுப்பாட்டு முறை: தரிசுக் காலங்களில் மண்ணை நன்கு கிளறி, புழுக்களை வெளிக்கொணர்ந்து அழிக்கவேண்டும். தாய்ப்பூச்சிகளை விளக்குப்பொறி வைத்து கவர்ந்தழிக்க வேண்டும். சுழல் தெளிப்புப் பாசனம் உள்ள இடங்களில் தெளிப்பானைக் காலை நேரங்களில் இயங்கச் செய்யவேண்டும். நீரின் வேகத்தால் புழுக்கள் மண்ணிலிருந்து வெளிக்கொணரப்பட்டு பறவைகளுக்கு இரையாகிவிடும்.

குளோரிபைரிபாஸ் மருந்தை ஒரு லிட்டர் நீரில் கலந்து செடிகளின் தண்டுப்பகுதியில் ஊற்றவேண்டும்.

நூற்புழுக்கள்: உருளைக்கிழங்கில் நூற்புழுவின் தாக்குதலைத் தவிர்க்க உருளைக்கிழங்கு இனத்தைச் சாராத பயிர் வகைகளான கோதுமை, மக்காச்சோளம், பீன்ஸ் போன்றவற்றைப் பயிரிடவேண்டும். அல்லது காய்கறிப் பயிர்களான முட்டைக்கோஸ், பூக்கோஸ், கேரட், முள்ளங்கி, அவரை வகைகளைப் பயிரிட்டு பயிர்ச் சுழற்சி செய்யவேண்டும். விதைக்கிழங்கை விதைக்கும் முன்பு கார்போபியூரான் கரைசலில் நனைக்கவேண்டும்.

விதைக்கிழங்குகளை விதைக்கும் முன்பு சுத்தப்படுத்த வேண்டும். நூற்புழுக்கள் நிறைந்த மண்ணிலுள்ள விதைக்கிழங்குகளை விதைக்காகப் பயன்படுத்தக்கூடாது. நூற்புழுக்களுக்கு எதிர்ப்புத் திறன் கொண்ட ரகங்களான குப்ரி சொர்ணா போன்ற ரகங்களைப் பயிரிடவேண்டும்.

இலைச்சுருள் நோய்: இந்நோயால் பாதித்த செடிகளின் அடிப்பகுதியில் உள்ள இலைகள் மேல்நோக்கிச் சுருண்டுவிடும். அத்தகைய செடிகள் வளர்ச்சி குன்றி வெளிர் நிறமாகத் தோன்றும். இந்த வைரஸும் அசுவினி மூலம் பரவுகிறது. வைரஸ் நோய்களைக் கட்டுப்படுத்த வைரஸ் தாக்காத செடிகளிலிருந்து கிழங்கு எடுத்து நடவேண்டும்.

தேவையறிந்து பூச்சிக்கொல்லி மருந்துகளைத் தெளித்து அசுவினியைக் கட்டுப்படுத்துவதன் மூலமும் இந்நோயைத் தவிர்க்கலாம்.

அறுவடை: கிழங்குகள் நன்கு முற்றி தடித்திருக்கும்போது தோண்டியெடுத்தால் சேதம் குறையும்.

பின்பு கிழங்குகளை ராசி, பெரிய பொடி, வந்தபொடி, தள்ளு என்னும் 4 விதமாக தரம் பிரித்து விற்பனைக்கு அனுப்பவேண்டும்.

மகசூல்: ஹெக்டேருக்கு 120 நாளில் 15 முதல் 20 டன் கிழங்குகள் மகசூலாக கிடைக்கும்.

## நாட்டுக் கோழிப்பண்ணைக்கு மானியம்: விண்ணப்பிக்க அழைப்பு

மாவட்டத்தில் மானியத்துடன் நாட்டுக் கோழிப்பண்ணை அமைக்க விரும்புவோர் வரும் 15 ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து மாவட்ட ஆட்சியரகம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தமிழ்நாடு அரசு கோழிப்பண்ணைத் தொழிலை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் கோழி அபிவிருத்தித் திட்டத்தினை ரூ.25 கோடி செலவில் 2016-17ஆம் ஆண்டில் செயல்படுத்த உள்ளது.

இந்தத் திட்டத்தின்கீழ் திருவண்ணாமலை மாவட்டத்தில் 140 நாட்டுக் கோழிப்பண்ணைகள் அமைக்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதில், விவசாயிகள், தனிநபர் தொழில் முனைவோர், சுயஉதவிக் குழுக்கள் ஆகியோர் தேர்வு செய்யப்பட தகுதியானவர்கள்.

கோழிப்பண்ணை அமைக்க போதிய நிலம் விண்ணப்பதாரர் பெயரிலோ அல்லது அவரது குடும்ப உறுப்பினர் பெயரிலோ இருத்தல் வேண்டும். கோழி வளர்ப்பில் முன் அனுபவம் உள்ளவர்களும், கோழி வளர்ப்பில் ஆர்வம் உள்ள விவசாயிகளும் இந்தத் திட்டத்தின்கீழ் பயன் பெறலாம்.
பயனாளிகள் தங்கள் சொந்த முதலீட்டில் அல்லது வங்கி மூலம் கடன் பெற்று கோழிப்பண்ணை அமைக்கலாம்.

250 அல்லது 500 நாட்டுக் கோழிகளைக் கொண்ட கோழிக்கொட்டகை கட்டும் பணி, உபகரணங்கள், கோழித்தீவனம், கோழிக்குஞ்சுகள் வாங்குதல், அசோலா உற்பத்தி போன்றவை அமைக்க ஆகும் மொத்த செலவில் 25 சதவீதம் முன் மானியமாக தமிழக அரசு வழங்குகிறது.

இதைத்தவிர கோழி வளர்ப்பதற்கான தீவனச்செலவினை குறைப்பதற்கு 10 பயனாளிகள் கொண்ட சுயஉதவிக்குழு ஒன்றுக்கு தலா ஒரு தீவன அரைவை இயந்திரத்தையும் தமிழக அரசு வழங்கும்.

மேலும், தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு தமிழ்நாடு கால்நடை மருத்துவர் மற்றும் அறிவியல் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் பயிற்சி மையங்களில் 3 நாள்களுக்கு முறையான பயிற்சி அளிக்கப்படும்.

இதற்கான தகுதியும், ஆர்வமும் உள்ளவர்கள் வங்கியிலிருந்து ஒப்புதல் கடிதம் அல்லது சொந்த நிதிக்கான சான்றுடன் விண்ணப்பங்களை கால்நடை பராமரிப்புத்

துறை மாவட்ட மண்டல இணை இயக்குநர், கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குநர்களிடம் வரும் 15-ஆம் தேதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என்று அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## "ரசாயன உரங்களால் உப்பாகிவிட்ட விளைநிலங்களை மீட்டெடுக்க வேண்டும்'

ரசாயன உரங்களால் உப்பாகிவிட்ட விளைநிலங்களை மீட்டெடுத்து, இயற்கை விவசாயத்துக்கு உகந்த வகையில் மாற்ற வேண்டும் என தேசிய விருது பெற்ற இளம் நடிகர் எஸ்.ஸ்ரீராம் தெரிவித்தார்.

பெரியார் பல்கலைக்கழக இதழியல் துறை சார்பில் நட்சத்திரங்களுடனான கலந்துரையாடல் நிகழ்ச்சி திங்கள்கிழமை நடத்தப்பட்டது. இதில், பசங்க படத்தில் நடித்ததன் மூலம் தேசிய விருது பெற்ற இளம் நடிகர் எஸ்.ஸ்ரீராம் கலந்துகொண்டு பேசியது: விவசாயம்தான் வாழ்வாதாரம் என்பதை உணரும் நிலை விரைவில் வரவேண்டும். தொடர்ச்சியாக பெரும்பாலான நேரம் இயந்திரங்களோடு பழகி, மனிதர்களோடு எப்படி பழக வேண்டும் என்பதை தொலைத்து விட்டோம். தொழில்நுட்பம் பெருக பெருக, விவசாயம் அழிந்து கொண்டே வருகிறது. எந்த ஒரு வேலையும், செயலின் முடிவும் உணவு உண்பதற்கான தேடலில்தான் முடிகிறது என்பதில் இருந்தே விவசாயத்தின் அவசியத்தை உணர முடியும். உழைப்பில்லாத வாழ்க்கை விரும்பப்படுவதாக மாறிவிட்ட நிலையில், அனைத்துவித வேலைகளையும் எளிதானதாக மாற்றி விட்ட செல்லிடப்பேசி நமது மூளையின் சிந்தனைத் திறனை வெகுவாக குறைத்து விட்டது. 20 சதவீதம் மட்டுமே பயன்படுத்தப்படுவதால், மூளையின் வெறுமையான இடம் குப்பைகளால் நிறைந்து வருகிறது.

120 நாள்களில் விளைய வேண்டிய அரசி ரசாயன உரங்களால் 80 நாள்களில் விளைகிறது. தொடர்ச்சியான ரசாயன உரங்களால் நிலம் உப்பாகி வருகிறது. தற்போதுள்ள சூழ்நிலையில், உப்பாகிவிட்ட நிலங்களை மீட்டெடுக்க குறைந்தபட்சம் 8 வருடங்களாகும். ரசாயனங்களைத் தவிர்த்து, இயற்கை விவசாயமாக மாற்றியபின், அதில் கிடைக்கும் கழிவுகள் விலங்குகளுக்கு உணவாக

பயன்படும். இயற்கை விவசாயத்தின் மூலம் கிடைக்கும் பலனை, அந்தந்த கிராமங்களின் வளர்ச்சிக்கு பயன்படுத்த வேண்டும். ரத்த காயத்தை அடுத்த ஒரு சில நிமிடங்களில் ஆறவைக்கும் மூலிகை இருப்பது நம்முடைய வரலாற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதை போன்ற அரிய வகை மூலிகைகளை தேடிக் கண்டிபிடிக்க வேண்டியது இளைஞர்களின் கடமையாகும் என்றார்.

இந்நிகழ்ச்சியில், இதழியல் துறைத் தலைவர் பேராசிரியர் வை.நடராஜன், பேராசிரியர் எஸ்.நந்தகுமார், உதவி பேராசிரியர் ஆர்.சுப்பிரமணி, நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் உதவி பேராசிரியர் ஜெ.விமல் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## வளவனேரி கிராமத்தில் நேரடி நெல் விதைப்புப் பயிற்சி

ஜயங்கொண்டம் வட்டார வேளாண் துறை சார்பில் மாநில விரிவாக்க உறுதுணை சீரமைப்புக் திட்டக்கின் கீம் சம்பா தொகுப்பு நேரடி நெல் விதைப்பு பயிற்சி முகாம் திங்கள்கிழமை நடைபெற்றது.

ஊராட்சி உறுப்பினர் சீனிவாசன் தலைமை வகித்தார். ஜயங்கொண்டம் வட்டார வேளாண் உதவி இயக்குநர் (பொ) காசிநாதன் பங்கேற்று தமிழக முதல்வரின் சம்பா சிறப்பு தொகுப்பு திட்டம்-2016ன் கீழ் விவசாயிகளுக்கு உழவு செய்ய ஏக்கருக்கு ரூ.500-ம் சான்று பெற்ற நெல் விதை கிலோவுக்கு 10 ரூபாயும், இயந்திரம் மூலம் நேரடி நெல் விதைப்பு செய்ய ஏக்கருக்கு 600 ரூபாயும், களைக்கொல்லி தெளிக்க 280 ரூபாயும், இயந்திரம் மூலம் நடவு செய்ய 2000 ரூபாயும் மானியமாக வழங்கப்படுவதாகக் கூறினார்.

மேலும் ஜயங்கொண்டம் மற்றும் மீன்சுருட்டி வேளாண் கிடங்குகளில் சி.ஆர்.1009, கோ.ஆர்.49 மற்றும் 50 ஆகிய ரக நெல் விதைகள் போதுமான அளவில் இருப்பு உள்ளதாகவும், டெல்டா விவசாயிகள் அதைப் பெற்று பயனடையுமாறும் கேட்டுக் கொண்டார். கிரீடு வேளாண் அறிவியல் மையப் பண்ணை மேலாளர் திருமலைவாசன் இலைப்புள்ளி, குலை நோயைக் கட்டுப்படுத்த சூடோமோனாஸ் கொண்டு விதை நேர்த்தி செய்யும் முறையை செயல்விளக்கம் செய்து காண்பித்தார்.

வேளாண் உகவி அலுவலர் பழனிவேல்,வட்டார தொழில்நுட்ப மேலாளர் மீனாட்சி ஆகியோர் பேசினர். முகாமில் பங்கேற்ற விவசாயிகளுக்கு கையேடுகள் வழங்கப்பட்டன. உகவி தொழில்நுட்ப மேலாளர் முருகன் வரவேற்றார். வேளாண் உதவி அலுவலர் கவிதா நன்றி கூறினார்.

## காரியாபட்டி பகுதியில் மழை இல்லாததால் கடலை சாகுபடி பரப்பளவு குறைவு

காரியாபட்டி பகுதியில் மழை இல்லாததால் நிகழாண்டு நிலக்கடலை சாகுபடி பாதிக்கப்பட்டுள்ளது.

விருதுநகர் மாவட்டத்தில் நரிக்குடி, திருச்சுழி, காரியாபட்டி பகுதிகள் வானம் பார்க்க பூமியாகும். மழையை நம்பி இப்பகுதியில் பருத்தி, மிளகாய், நிலக்கடலை போன்ற பயிர்கள் விவசாயம் செய்யப்படும்.

கடந்த பல ஆண்டுகளாக இப்பகுதியில் சுமார் 1,000 ஏக்கரில் நிலக்கடலை மற்றும் துவரை பயிரிடுவது வழக்கம். நிகழாண்டு மழை பொய்த்தால் காரியாபட்டி, அ. முக்குளம் பகுதியில் சுமார் 100 ஏக்கரில் மட்டுமே நிலக்கடலை விவசாயம் செய்யப்பட்டுள்ளது. அதுவும், மோட்டார் பாசன விவசாயிகள் மட்டுமே விதைத்துள்ளனர். இதனால, ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் தரிசாக காணப்படுகின்றன.

இது குறித்து அ. முக்குளம் விவசாயி ராமச்சந்திரன் கூறியது: ஒரு ஏக்கரில் நிலக்கடலை பயிரிட உழவு, விதை கடலை, உரம், களை எடுத்தல் என ரூ. 20 ஆயிரம் செலவாகிறது. 2 ஆண்டுகளாக மழை பொய்த்ததால் அறுவடை நேரத்தில் கடலைகளை தூருடன் பிடுங்க முடியாத நிலை ஏற்பட்டது. காப்பீட்டு தொகையும் கிடைக்கவில்லை. இதனால், விவசாயிகள் செலவு செய்த தொகையை கூட எடுக்க முடியவில்லை. இதன் காரணமாக நிகழாண்டு நிலக்கடலை பயிரிடுவதை விவசாயிகள் குறைத்து விட்டனர் என்றார்.

**வேளாண் பல்கலை. தகவல் மையத்தில் செப்.19-இல் அலங்காரத் தோட்டம் அமைக்க பயிற்சி**

அலங்காரத் தோட்டம், புல்தரை அமைக்கும் பயிற்சியானது வேளாண் பல்கலைக்கழக தகவல் மையக்கில் செப்.19இல் நடைபெற உள்ளது. இதுகுறித்து வேளாண் பல்கலை. தகவல் மையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: எளிதில் கிடைக்கும் தாவரங்கள், தாவரமற்ற அங்கங்கள் ஆகியவற்றை பயன்படுத்தி சுற்றுச்சூழலுக்கு ஏற்றவாறு அலங்காரத் தோட்டம் அமைக்கப்படுகிறது. இதன்மூலம், பூங்காக்களில் பொழுதுபோக்கு, அழகுணர்வு, இயற்கையை ரசித்தல், சுற்றுப்புற மாசை தவிர்த்தல் உள்ளிட்ட விஷயங்கள் மூலம் நில மதிப்பீடு உயர்த்தப்படுகிறது. அதன்படி, அலங்கார்த் தோட்டம், புல்தரை அமைக்கும் பயிற்சியானது செப்டம்பர் 19-இல் வேளாண் பல்கலைக்கழக தகவல் பயிற்சி மையத்தில் நடைபெற உள்ளது.

இந்தப் பயிற்சியில், இளைஞர்கள், மாணவர்கள், சுயஉதவிக்குழுக்கள், தொழில் முனைவோர், தொண்டு நிறுவனங்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டு இந்த வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளலாம். இந்தப் பயிற்சியில் கலந்துகொள்ள விரும்புவோர், 044-26263484 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்புகொண்டு விவரங்களை அறிந்துகொள்ளலாம். மேலும், இந்தப் பயிற்சியில் கலந்துகொள்வோர்க்கு சான்றிதழ் உள்ளிட்டவை வழங்கப்பட உள்ளன என வேளாண் பல்கலைக்கழக தகவல் மையம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## காவிரி விவகாரம்: நீலகிரி மாவட்டத்தில் கேரட் தேக்கம்



காவிரி விவகாரம் தொடர்பாக நீலகிரி மாவட்டக்தில் விளைந்துள்ள கேரட்டுகளை கர்நாடக மாநிலத்துக்கு அனுப்ப முடியாமல் தேக்கம் அடைந்துள்ளது.

நீலகிரி மாவட்டம், குன்னூர், கோத்தகிரி பகுதிகளில் முக்கிய மலை தோட்டக் காய்கறியாக கேரட் சாகுபடி உள்ளது. இங்கு விளையும் கேரட்டுகள் பெங்களூருக்கு லாரிகள் அனுப்பப்பட்டு வந்தது. இந்நிலையில், காவிரி நீர் விவகாரம் தொடர்பாக கடந்த சில நாள்களாக கர்நாடகத்தில் ஏற்பட்டுள்ள அசாதாரமான சூழ்நிலைக் காரணமாக குன்னூரில் இருந்து லாரிகளில் கேரட் எடுத்து செல்ல முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், விளைச்சல் அதிகரித்து காணப்படுவதாலும், பெங்களூருக்கு லாரிகள் செல்லமுடியாத காரணத்தாலும் இப்பகுதிகளில் கேரட் தேக்கமடைந்துள்ளது. கடந்த சில மாதங்களுக்கு முன் ஒரு கிலோ கேரட் ரூ. 40 முதல் 60 வரை விற்கப்பட்டு வந்த நிலையில், தற்போது கிலோவுக்கு மொத்த விற்பனையில் ராசி வகை கேரட் ரூ. 20 முதல் 25 வரை விற்கப்படுகிறது. இந்த விலைக் குறைவு காரணமாக இங்குள்ள கேரட் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

விடுதலை சிறுத்தை கட்சி நிர்வாகி கைது:

குன்னூரிலிருந்து பெங்களூரு புறப்படவிருந்த கர்நாடக மாநிலப் பேருந்தை, விடுதலை சிறுத்தைகள் கட்சியின் ஒன்றியச் செயலாளர் ரவி திங்கள்கிழமை வழிமறித்து போராட்டத்தில் ஈடுபட்டார். இதைத் தொடர்ந்து, அவரை குன்னூர் போலீஸார் கைது செய்தனர்.

## "அனைத்துப் பயிர்களுக்கும் சொட்டுநீர் பாசனமே சிறந்தது'



அனைத்து பயிர்களுக்கும் சொட்டுநீர் பாசன முறையே சிறந்தது என நிலக்கோட்டையில் நடைபெற்ற பயிற்சி முகாமில் தெரிவிக்கப்பட்டது.

திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டையில் திங்கள்கிழமை மழை நீர் சேகரிப்பு மற்றும் நீர் மேலாண்மை திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் திங்கள்கிழமை நடைபெற்றது. வேளாண்மைத் துறை அலுவலகத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில், நிலக்கோட்டை வேளாண்மை துறை உதவி இயக்குநர் க.முருகன் தலைமை வகித்தார். சொட்டு நீர் பாசனத்தின் பயன்பாடு பற்றி அவர்

கூறுகையில், விவசாய நிலங்களில் சொட்டு நீர்ப் பாசனம் செய்யும் போது மண்ணின் தன்மை எப்பொழுதும் தளர்வாக இருக்கும். இதனால், பயிர்கள் செழித்து வளரும். தண்ணீர் ஏகமாக பாய்ச்சுவதால் மண் இறுகி விடுகிறது. இதனால் பயிர் செழித்து வளராது. ஆகவே, அனைத்து பயிர்களுக்கும் சொட்டுநீர் பாசன முறையே சி=றந்தது. பல வெளி நாடுகளில் இம்முறையே அதிகம் விவசாயிகள் பின்பற்றுகின்றனர். மேலும், விவசாய நிலங்களில் மழைநீர் சேகரிப்பு குட்டைகள் அமைக்கப்பட வேண்டியதும் அவசியமான ஒன்றாகும். இதனால் நிலத்தடி நீர் மட்டம் கூடும் என்றார்.

இந்நிகழ்ச்சியில், துணை வேளாண் அலுவலர் தண்டபாணி, சிறப் தொண்டு நிறுவன திட்ட ஒருங்கிணைப்பாளர் ராஜ்குமார், உதவி தொழில் நுட்ப மேலாளர் சுப்பிரமணி, தேனி குள்ளப்புரம் விவசாயக் கல்லூரி மாணவர்கள், பினாலக்ஸ் நிறுவன அலுவலர் சுந்தர், வில்லியம்பட்டி அம்மா பண்ணை மகளிர் குழு உள்பட விவசாயிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர். முடிவில் வட்டார தொழில் நுட்பமேலாளர் ஐ.சிங்கத்துரை நன்றி கூறினார்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**செப்டம்பரில் சீராக்கப்படும் புற்றுகள்**

வீடுகளை வெள்ளையடிக்கிறோம்; மராமத்து செய்கிறோம்; மறு நிர்மாணம் செய்கிறோம். அதைப் போன்று கரையான்களும் தங்கள் புற்றுக்களை ஆகஸ்ட், செப்டம்பரில் புதிதாக மாற்றுகின்றன. கரையானின் உமிழ்நீரும் சேர்ந்து கரையான் புற்றுகள் உருவாக்கப்படுகின்றன. கரையான்களின் முக்கிய எதிரிகள் எறும்புகள். இந்த எறும்புகளுக்காக எறும்பு தின்னிகளும்,
கரடிகளும் கரையான் புற்றுகளைச் சிதைக்கின்றன. இவ்வாறு சிதைக்கப்பட்ட புற்றுகளை தான் கரையான் ஆண்டுதோறும் சீராக்குகின்றது. புற்றினுள் தாவரங்களை பரப்பி பூஞ்சைகளை வளர்த்து அவற்றை உணவாக கரையான்

உட்கொள்கிறது. புற்றுகளில் உள்ளே உள்ள சிறுசிறு அறைகள் கரையான் புற்றுக்கு கதகதப்பைத் தருகின்றன.

## தென்னை தின விழா

கோபி: கவுந்தப்பாடி அருகே, பாப்பாங்காட்டூரில், உழவர் விவாத குழு மற்றும் பாசன சபை சார்பில், தென்னை தின விழா நேற்று நடந்தது. விழாவுக்கு மாணிக்க சுந்தரம் கலைமை வகித்தார். உமவர் விவாதக்குழு அமைப்பாளர் வெங்கடாசலபதி, தென்னை விழா தினத்தின் நோக்கம் குறித்து பேசினார். தென்னையில் பூச்சி நோய் தாக்குதல், சிகப்பு கூண் வண்டுகளை பொறி வைத்துப் பிடித்தல் குறித்தும், தென்னை டானிக், ஆண்டுக்கு இருமுறை, வேர் மூலம் செலுத்த வேண்டியதன் அவசியம் குறித்தும், விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

## மஞ்சூரில் மிதமான மழை

மஞ்சூர் : மஞ்சூர் சுற்றுவட்டார பகுதியில் மிதமான மழை யால் விவசாயிகள் ஏமாற்றமடைந்தனர்.
மஞ்சூர் சுற்றுவட்டாரத்தில் தேயிலை விவசாயம் பிரதான தொழிலாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நடப்பாண்டு துவக்கத்திலிருந்து போதிய அளவு மழை இல்லாததால், தேயிலை செடிகள் கருகும் நிலை ஏற்பட்டது. கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் கொள்முதல் அளவு அடியோடு குறைந்ததால், தேயிலை துாள் உற்பத்தியும் சரிந்தது. இந்நிலையில், நேற்று மதியம் மிதமாக மழை பெய்தது.

எனினும், எதிர்பார்த்த அளவுக்கு மழை இல்லாததால், விவசாயிகள் கவலை அடைந்தனர்.

## மானிய விலையில் விதை நெல்

நக்கம், நக்கம் பகுதியில் உள்ள விவசாயிகள் வேளாண்மை விரிவாக்க மையங்களில் மானிய விலையில் விதை நெல் பெறலாம் என நத்தம் வேளாண்மை உதவி இயக்குனர் சசிகலா தெரிவித்தார்.

அவர் கூறியதாவது,'தற்போது தொடங்கவுள்ள வடகிழக்கு பருவ மழையை பயன்படுத்தி விவசாயிகள் சம்பா சாகுபடி செய்ய உள்ளனர். இதற்காக கோ 51,

கோ 50, திருச்சி 3 ஆகிய விதை நெல் ரகங்கள் விற்பனைக்கு உள்ளது. ஒரு கிலோ விதை நெல்லுக்கு ரூ.10 மானியம் வழங்கப்படுகிறது.

தேவைப்படும் விவசாயிகள் நத்தம் மற்றும் செந்துறை வேளாண்மை விரிவாக்க மையங்களில் பெறலாம்.

## அவரை விலை உயர்வு

பழநி, மழை இல்லாததால் பழநிபகுதியில் அவரை விளைச்சல் பாதிக்கப்பட்டு விலை உயர்ந்துள்ளது.

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் சத்திரப்பட்டி, மஞ்சநாயக்கன்பட்டி, சிந்தலவாடம்பட்டி, கணக்கன்பட்டி, பழநி, பாலசமுத்திரம், பாப்பம்பட்டி, கரடிகூட்டம், குதிரையாறு உள்ளிட்ட பகுதிகளில் அதிகளவில் காய்கறிகள் சாகுபடி செய்யப்படுகிறது. கடந்த சில மாதங்களாக மழை இல்லாததால் காய்கறிவிளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. இதில் குறிப்பாக அவரைக்காய் வெயிலின் தாக்கத்தில் பூக்கள் உதிர்ந்து காய்ப்பு குறைந்து விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. கடந்த மாதம் உழவர்சந்தைக்கு தினமும் 800 கிலோ வரை வந்த அவரைக்காய் தற்போது தினமும் 250கிலோ முதல் 300 கிலோ தான் வருகிறது. கடந்தமாதம் ஒரு கிலோ ரூ.20 முதல் ரூ.25 வரை விற்றது. தற்போது ஒரு கிலோ ரூ.25 முதல் ரூ.34 வரை தரத்திற்கு ஏற்றவாறு விற்கிறது. விலை உயர்ந்தபோதும் போதிய விளைச்சல் இல்லாததால் அவரை சாகுபடிசெய்துள்ள விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## கட்டளை கிராமத்தில் விவசாயிகளுக்கு பயிற்சி

திண்டிவனம்: மரக்காணம் வட்டம், கட்டளை கிராமத்தில் கிராம அளவிலான பயிற்சி முகாம் நடந்தது.

திண்டிவனம் உழவர் பயிற்சி நிலையத்தின் சார்பில் நடந்த முகாமிற்கு, உழவர் பயிற்சி நிலைய துணை இயக்குநர் விஜயக்குமார் தலைமை தாங்கினார். பயறுவகை உற்பத்தியை பெருக்க பல்வேறு தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கப்பட்டது.

பயிற்சியில், வேளாண்மை அலுவலர் சரவணன், கருணாநிதி ஆகியோர் பங்கேற்று, விதைநேர்த்தி, நுண்ணுயிர் உர உபயோகம் மற்றும் மத்திய, மாநில அரசு

திட்டங்கள் குறித்தும் எடுத்துரைத்தனர். உதவி வேளாண்மை அலுவலர் யமுனா, உளுந்து விதையில் ரைசோபியம் விதை நேர்த்தி செய்து, விதைக்க செயல்விளக்கம் அளித்தார்.

பயிற்சியில் கட்டளை உழவர் மன்ற உறுப்பினர்கள் மற்றும் ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## கடங்க ஆண்டு பெய்த கனமழையால்...பாதிப்பு பருத்தி சாகுபடி பாதியாக குறைந்தது

தியாகதுருகம்: கடந்த ஆண்டு கனமழை பெய்து பருத்தி மகசூல் கடுமையாக பாதிக்கப்பட்டதன் எதிரொலியாக, தியாகதுருகம் பகுதியில் மானாவாரி பருத்தி சாகுபடி பாதியாக குறைந்துள்ளது.

விழுப்புரம் மாவட்டம், தியாகதுருகம் பகுதியில் மானாவாரி பருத்தி பயிரிடுவதில் விவசாயிகள் அதிகளவில், ஆர்வம் காட்டி வருகின்றனர்.

கடந்த ஆண்டுகளில், இப்பகுதியில் 8 ஆயிரம் ஏக்கர் பரப்பில், பருத்தி சாகுபடி செய்யப்பட்டது. இயற்கையாக பெய்யும் மழை ஈரத்தை கொண்டு செடிகள் வளர்ந்து பலன் தருகிறது.

குறிப்பாக இப்பகுதியில் உள்ள 20 க்கும் மேற்பட்ட கிராமத்தில் உள்ள மானாவாரி நிலங்களின் முக்கிய பயிராக பருத்தி பயிரிடப்பட்டது. இது தென்மேற்கு பருவமழை காலத்தில் விதைக்கப்பட்டு, வடகிழக்கு பருவமழை ஈரத்தை கொண்டு வளர்ந்து பலன் தருகிறது.

அளவான மழை பெய்தால், பருத்தி மகசூல் மூலம் விவசாயிகளுக்கு கணிசமான லாபம் கிடைக்கும். வழக்கமாக செடிகளில் காய் முற்றும் தருணங்களில், வடகிழக்கு பருவமழை தீவிரமாக பெய்து, வயலில் தண்ணீர் தேங்கி காய்கள் அழுகிவிடுவதாலும், பஞ்சு அறுவடை பருவத்தில் பனிப்பொழிவு அதிகமாக இருப்பதாலும், நனைந்து வீணாகி மகசூல் பாதிக்கப்படுகிறது.

இருப்பினும் விவசாயிகள் நம்பிக்கையோடு பருத்தி சாகுபடியில் தொடர்ந்து ஈடுபட்டு வந்தனர்.

இந்நிலையில் கடந்த ஆண்டு டிச., மாதம் பெய்த பேய்மழையால், பருத்தி வயலில் பல வாரங்களுக்கு தண்ணீர் வடியாமல் தேங்கி செடிகள் அழுகியது.

இதனால் மானாவாரி பருத்தி சாகுபடி செய்த விவசாயிகள் கடும் நஷ்டத்தை சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

இதன் எதிரொலியாக தற்போது பருத்தி சாகுபடி செய்வதை பெரும்பாலான விவசாயிகள் தவிர்த்துள்ளனர்.

விருகாவூர், கணங்கூர், நாகலூார், கண்டாச்சிமங்கலம், புதுஉச்சிமேடு, கூத்தக்குடி, சித்தலூார், பானையங்கால், முடியனுார் உள்பட சுற்று
வட்டாரத்தில் உள்ள பெரும்பாலான கிராமங்களில் பருத்தி சாகுபடி பரப்பு அதிரடியாக குறைந்துள்ளது.

இதன் காரணமாக இவ்வாண்டு, 4 ஆயிரம் ஏக்கர் பரப்பில் மட்டுமே பருத்தி பயிரிட்டுள்ளனர். பெரும்பாலான விவசாயிகள் மாற்று பயிராக மக்காச்சோளம், உளுந்து பயிருக்கு மாறியுள்ளனர்.

இதனால் தியாகதுருகம் பகுதியில் பருத்தி சாகுபடி பாதியாக குறைந்தததால், பஞ்சு உற்பத்தி வெகுவாக குறையும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

## 84 அடியை எட்டுகிறது மேட்டூர் அணை நீர்மட்டம்

மேட்டூர்: மேட்டூர் அணை நீர் மட்டம் 83.850 அடியாக உள்ளது. 1அணைக்கு, வினாடிக்கு 13,090 கன அடி நீர் வந்து கொண்டுள்ளது. அணையில் இருந்து வினாடிக்கு 1250 கன அடிநீர் வெளியேற்றப்படுகிறது.

## நாளை விவசாயிகள் குறைதீர் கூட்டம்

சேலம்: சேலம் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம், நாளை நடைபெற உள்ளது. இதுகுறித்து, சேலம் கலெக்டர் சம்பத் கூறியதாவது: செப்டம்பருக்கான, விவசாயிகள் குறைதீர் கூட்டம், நாளை(16ம் தேதி) காலை, 11:00 மணிக்கு, கலெக்டர் அலுவலக, முதல் தள கூட்ட அரங்கத்தில், கலெக்டர் தலைமையில் நடைபெற உள்ளது. அதில், வேளாண் குறித்த, தங்கள் குறைகளை, நேரிலும், விண்ணப்பம் மூலமும் விவசாயிகள் தெரிவிக்கலாம். இவ்வாறு அவர் கூறினார்.

## ஒகேனக்கல் காவிரியில் நீர்வரத்து குறைந்தது: மேட்டூர் அணை நீர்மட்டம் அதிகரிப்பு

ஒகேனக்கல்: கர்நாடக அணைகளில் இருந்து திறந்து விடப்படும் தண்ணீரின் அளவு குறைக்கப்பட்டுள்ளதால், ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து குறைந்துள்ளது. மேட்டூர் அணை நீர்மட்டம் அதிகரித்தது.

தமிழகத்திற்கு காவிரியில் வினாடிக்கு, 15 ஆயிரம் கன அடி வீதம், பத்து நாட்களுக்கு தண்ணீர் திறந்து விட, கர்நாடக அரசுக்கு, உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது. இதையடுத்து, கர்நாடகாவில் உள்ள கபினி மற்றும் கிருஷ்ண ராஜசாகர் உள்ளிட்ட அணைகளில் இருந்து தமிழகத்திற்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது. இதனால் ஒகேனக்கல் காவிரி ஆற்றில் தண்ணீர் வரத்து அதிகரித்தது. இந்நிலையில், கடந்த, 12ம் தேதி கர்நாடக அரசு தொடர்ந்த வழக்கு, உச்சநீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. அப்போது, தீர்ப்பில் மாற்றம் செய்து, செப்டம்பர், 20ம் தேதி வரை தினமும், 12 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறந்து விட உத்தரவிடப்பட்டது. இதையடுத்து, கர்நாடக அணைகளில் இருந்து திறக்கப்படும் தண்ணீரின் அளவு குறைக்கப்பட்டது. இதையடுத்து, ஒகேனக்கல் காவிரி ஆற்றில், நேற்று முன்தினம் மாலை வினாடிக்கு, 16 ஆயிரம் கன அடியாக இருந்த நீர்வரத்து, நேற்று காலை, 9:00 மணிக்கு, 14 ஆயிரம் கனஅடியாக குறைந்தது. மாலை, 5:00 மணிக்கு வினாடிக்கு, 13 ஆயிரத்து, 500 கன அடியாக குறைந்தது. நீர்வரத்து மேலும் குறைய வாய்ப்புள்ளதாக அதிகாரிகள் கூறினர்.

நீர் மட்டம் உயர்வு: மேட்டூர் அணை நீர்மட்டம், நேற்று, 82.89 அடியாக உயர்ந்தது. சில நாட்களாக, காவிரியாற்றில் வினாடிக்கு, 15 ஆயிரம் கனஅடிக்கு மேல், தண்ணீர் வருகிறது. இதனால், நேற்று முன்தினம், 81.69 அடியாக இருந்த, மேட்டூர் அணை நீர்மட்டம், நேற்று, 82.89 அடியாக உயர்ந்தது. நேற்று, அணை நீர்இருப்பு, 44.89 டி.எம்.சி.,யாக இருந்தது. வினாடிக்கு, 15 ஆயிரத்து, 752 கனஅடி நீர் வந்தது. கடந்த, ஆறு நாட்களில் நீர்மட்டம், ஆறு அடியும், நீர் இருப்பு, ஆறு டி.எம்.சி.,யும் அதிகரித்துள்ளது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## 2 ஆண்டில் இல்லாத அளவுக்கு மொத்த விலை பண வீக்கம் அதிகரிப்பு



புதுடெல்லி: மொத்த விலை பண வீக்கம் கடந்த ஆகஸ்ட் மாதத்தில் 3.74 சதவீதமாக அதிகரித்துள்ளது. 2014ம் ஆண்டு நவம்பரில் இருந்து மொத்த விலை பண வீக்கம் எதிர்மறை விகிதத்திலேயே இருந்து. ஆனால், கடந்த 7 மாதமாக உயர்ந்து வருகிறது. இதற்கு முன்பு ஆகஸ்ட் 204ல் மொத்த விலை பண வீக்கம் 3.74 சதவீதமாக இருந்தது. 2 ஆண்டுக்கு பிறகு மீண்டும் அதே அளவை எட்டியுள்ளது. காய்கறி விலை ஜூலையை விட ஆகஸ்ட்டில் குறைந்துள்ளது. ஆனால், பருப்பு வகைகள் விலை 34.55 சதவீதமாக உள்ளது என வர்த்தக அமைச்சக புள்ளிவிவரம் தெரிவிக்கிறது.

தக்காளி விலை 66.72 சதவீதம், சர்க்கரை 35.36 சதவீதம், பழங்கள் 13.91 சதவீதம் அதிகரித்துள்ளன. இதுவே பணவீக்கம் அதிகரிக்க காரணம். எதிர்பார்க்கப்பட்ட அளவிலேயே பண வீக்கம் உள்ளதாக இக்ரா கூறியுள்ளது. மத்திய அரசு தேவைக்கேற்ப சப்ளையை அதிகரித்து விலையை குறைந்தது 6 மாதமாவது

கட்டுக்குள் வைக்க வேண்டும். அப்போதுதான் இலக்கை எட்ட முடியும் என அசோசெம் தெரிவித்துள்ளது.

மொத்த விலை பண வீக்கம் அதிகரித்தாலும், சில்லரை விலை பண வீக்கம் 5 மாதங்களில் இல்லாத அளவுக்கு 5.05 சதவீதமாக குறைந்தது. அதேநேரத்தில் தொழிற்சாலை உற்பத்தி திடீரென சரிவடைந்தது. இதனால் வளர்ச்சியை ஊக்குவிக்க அடுத்தமாதம் 4ம் தேதி சமர்ப்பிக்கப்பட உள்ள ரிசர்வ் வங்கி நிதிக்கொள்கை மறு சீராய்வு அறிக்கையில் வட்டி விகிதம் குறைக்கப்படலாம் என்ற நம்பிக்கையை தொழில்துறையினரிடையே உருவாக்கியுள்ளது.

**உணவு பதப்படுத்தல் துறை மும்மடங்கு வளர்ச்சியடையும்**



டெல்லி: உணவு பதப்படுத்தல் துறை வரும் ஆண்டுகளில் மூன்று மடங்கு வளர்ச்சியை எட்டும் என மத்திய அமைச்சர் கவுர் பாதல் கூறினார். உணவு பதப்படுத்தல் துறையில் சில்லரை விற்பனையாளர்கள், பதப்படுத்துபவர்கள், உற்பத்தி செய்வோர் இதன் வளர்ச்சியை தீர்மானிப்பவர்களாக இருப்பார்கள்.

இந்திய உணவு சந்தை புதிய பொருட்கள் உற்பத்தி மற்றும் பதப்படுத்துதலில் நவீனமாக்கலை எதிர்கொள்ள தயாராக உள்ளது. தற்போது 1.5 லட்சம் கோடி மதிப்பில் உள்ள உணவு பதப்படுத்தல் துறை ஒரு சில ஆண்டுகளில் மும்மடங்கு வளர்ச்சியை சந்திக்க இருக்கிறது என்றார். உணவு பதப்படுத்தல் துறை செயலாளர்

அவினாஷ் வத்ஸவா கூறுகையில், ‘‘100 சதவீத அந்நிய முதலீட்டுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள உணவு பதப்படுத்தல் துறை, மேக் இன் இந்தியா திட்டத்தில் 10 முக்கிய துறைகளில் ஒன்றாக உள்ளது என்றார்.

**மாநகரில் வெளுத்து வாங்கிய மழை**

திருப்பூர்: திருப்பூரில் நேற்று பெய்த திடீர் மழையால் மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.திருப்பூர் மாவட்டத்தில் கடந்த சில மாதங்களாகவே வெயில் வாட்டி வதைத்து வந்தது. மாவட்டத்தை சுற்றியுள்ள காங்கயம், தாராபுரம், உடுமலை, மூலனூர் உள்ளிட்ட பகுதிகளில் அவ்வப்போது மழை பெய்து வந்தது. இருப்பினும், மாவட்டத்தின் சுற்றுப்புற பகுதிகளில் கடந்த ஒரு வாரமாக வெயிலின் தாக்கம் சற்று அதிகமாகவே காணப்பட்டது. இதனால், நிலத்தடி நீர்மட்டம் குறைந்ததோடு நீர் நிலைகளும் வற்ற துவங்கியது. இந்நிலையில், நேற்று காலைமுதல் வெயில் சுட்டெரித்த நிலையில், மதியம் 1 மணியளவில் திடீரென துவங்கிய மழை சுமார் 1 மணி நேரம் கொட்டித்தீர்த்தது. இதனால், மக்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தனர். பல்வேறு இடங்களில் சாலைகளில் மழைநீர் தேங்கியதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. தென்மேற்கு பருவமழை முதல் மூன்று மாதங்கள் ஏமாற்றத்தை தந்தபோதிலும், தற்போது பெய்ய துவங்கியுள்ளது.

**பழம், பூச்செடி நாற்று விற்பனை மும்முரம்**

கரூர்: குற்றாலம் பகுதியில் இருந்த கொண்டுவரப்பட்ட பழம் பூச்செடிகளின் நாற்றுகள் கரூர் பகுதியில் மும்முரமாக விற்பனை செய்யப்படுகிறது. இதில் தென்னை, கொய்யா, மா, பலா, எலுமிச்சை, மாதுளை, ரோஜா, செம்பருத்தி, அடுக்குமல்லி, ஒத்தமல்லி, கறிவேப்பிலை, பவளவள்ளி போன்ற செடிகளை வேனில் கொண்டுவந்து விற்பனை செய்கின்றனர். குற்றாலம் தவிர தேனி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் நாற்றுகளை பயிரிட்டு விற்பனைக்கு கொண்டுவந்து விற்பனை செய்வதாக தெரிவித்தனர். குறைந்த பட்சமாக ஒரு செடி ரூ.30க்கு விற்பனையாகிறது. தென்னங்கன்றுகள் ரூ.250க்கு விற்கப்படுகிறது.

கரூர்:செட்டிநாடு பொறியியல் மற்றும் தொழில்நுட்ப கல்லூரியில் லியோ சங்கம், நாட்டு நலப்பணித்திட்டம் சார்பில் பொதுமருத்துவ முகாம் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. கல்லூரி முதல்வர் புனிதா வரவேற்றார். அப்போலோ

மருத்துவமனை பார்த்தசாரதி பல் மருத்துவமனை, டைடன்ஜபிளஸ், கரூர் ரத்த வங்கி மருத்துவர்கள் பரிசோதனைகளை செய்து அறிவுரை வழங்கினர். நாட்டுநலப்பணித்திட்ட ஒருங்கிணைப்பாளர் இளமுருகன் நன்றி கூறினார்.

## கிருஷ்ணராயபுரம் பகுதியில் மலர்சாகுபடி தீவிரம்

கரூர்: கிருஷ்ணராயபுரம் வட்டாரத்தில் மலர் சாகுபடி பரவலாக செய்யப்பட்டுள்ளது. கோவகுளம், தொட்டியபட்டி, மகாதானபுரம், தாளியாம்பட்டி, வரகூர் உள்ளிட்ட பகுதிகளில் விவசாயிகள் தோட்டங்களில் மல்லிகை, கோழிக்கொண்டை, சம்பங்கி, செவ்வந்தி போன்ற மலர் வகைகளை சாகுபடி செய்துள்ளனர். தற்போது செடிகளில் பூக்கள் பிடிக்கும் நிலையில் உள்ளது. பூக்களை பறித்து விற்பனைக்கு அனுப்பும் பணிகளில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

## சம்பா நெல் சாகுபடியில் குறைந்த நீரில் அதிக மகசூல் : வேளாண் அறிவியல் மையம் வழிகாட்டல்

அரியலூர்: சம்பா நெல் சாகுபடியில் குறைந்த நீரை பயன்படுத்தி அதிக மகசூல் பெறுவது குறித்து, சோழமாதேவி கிரீடு வேளாண் அறிவியல் மைய தொழில்நுட்ப வல்லுநர் ராஜ்கலா விவசாயிகளுக்கு யோசனை கூறியுள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

அதிகரித்துவரும் நீர்ப்பற்றாக்குறையால், குறைந்த நீரைப் பயன்படுத்தி நெல் உற்பத்தியை அதிகரிக்க திருந்திய நெல் சாகுபடி முறை மிகவும் பயன்தரும். இத்தொழில்நுட்பத்தின்படி, தகுந்த உயர் விளைச்சல் ரகங்கள், சீரிய நீர் மேலாண்மை, சிறந்த களை நிர்வாகம் போன்ற காரணிகள் அதிக விளைச்சலுக்கு வழிவகுக்கும்.

சம்பா பருவத்தில் செப்டம்பர், அக்டோபர் மாதத்தில் நெல் சாகுபடி செய்யப்படுகின்றது. இப்பருவத்திற்கு நடுத்தர கால நெல் ரகங்கள் மிகவும் ஏற்றவை ஆகும். அதாவது, 130 முதல் 135 நாட்கள் வயதுடைய நெல் ரகங்கள், இப்பருவ சாகுபடிக்கு மிகவும் ஏற்றவை. உயர்விளைச்சல் அளிக்கும் ரகங்களான ஐ.ஆர்.20, பொன்னி, கோ 43, திருச்சி 1, அம்பாசமுத்திரம் 19, ஆடுதுறை 39, ஆடுதுறை 46, ஆடுதுறை 50 மற்றும் கோ.50 ஆகியவற்றையும் இப்பருவத்தில்

சாகுபடி செய்யலாம். ஒற்றை நாற்றாக ஒரு ஹெக்டேர் நடவு செய்ய சுமார் 7 கிலோ முதல் 8 கிலோ விதையளவு போதுமானது.

ஒற்றை நாற்றுகள் சரிவராத தருணத்திற்கு 2 நாற்றுக்களாக நடவு செய்ய 12 முதல் 15 கிலோ விதை போதுமானது. ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் என்ற அளவில் சூடோமோனாஸ், புளூரசன்ஸ் ஒரு லிட்டர் நீரில் கரைத்து 10 மணி நேரம் ஊறவைக்கவேண்டும். பின்னர், ஊறவைத்த விதையை நனைந்த கோணிச் சாக்கில் கட்டி மூடி 24 மணி நேரம் இருட்டில் வைத்து முளை கட்டிய பின்னர் விதைக்கலாம். நடவு செய்ய 14 முதல் 18 நாட்கள் வயதுடைய நாற்றுகள் ஏற்றது. மேலும், பயிர் இடைவெளி அளிக்க வேண்டியது மிகவும் அவசியம். வரிசைக்கு வரிசை 25 செமீ பயிருக்கு பயிர் 25 செமீ என்ற அளவில் இடைவெளி இருக்குமாறு நடவேண்டும்.

இவ்வாறு இடைவெளி அளிப்பதால் பயிருக்கு கிடைக்கும் ஊட்டச்சத்துக்கள், சூரிய ஒளி, காற்றோட்டம் போன்றவை தேவையான அளவில் கிடைக்கும். ஒற்றை நாற்று நடவு செய்வதால், விதைத் தேவையும் கணிசமாகக் குறைகின்றது. இவ்வகையான ஒற்றை நாற்றுகளில் 14 முதல் 18 நாட்கள் வயதுடைய நாற்றுகளைத் தேர்வு செய்து நடவேண்டும். குறைந்த நீரைக்கொண்டு அதிக விளைச்சல் பெறும் வழிமுறைகளைக் கையாண்டு நீர்த்தேவையைக் குறைக்கலாம். நெற்பயிருக்கு சாதாரணமாக காய்ச்சலும் பாய்ச்சலுமாக நீர்ப் பாசனம் செய்யலாம். அதாவது, நடவு செய்த முதல் 10 நாட்களில் மண் மற்றும் நீர் கட்டுதல் மிக முக்கியம். பின்னர், நீர்ப்பாசனம் செய்த வயலில், மண்ணில் 1 செமீ முதல் 2 செமீ அளவிற்கு சிறு கீறல்கள் ஏற்படும் தருணம், அடுத்தமுறை நீர்ப் பாய்ச்சுதல் வேண்டும்.

அதன்பிறகு, பயிரில் கதிர் உருவாகும் தருணத்தில் இருந்து அறுவடை நிலை வரை 4 முதல் 5 செ.மீ. அளவிற்கு நீர் பாய்ச்சி கட்டிய நீர் மறைந்தவுடன் மீண்டும் நீர்கட்ட வேண்டும். இவ்வாறு செய்வதால் பயிருக்கு தேவைப்படும் நீரின் அளவு சுமார் 20 முதல் 30 சதம் சேமிக்கப்படுகின்றது. நெல்லுக்கு காய்ச்சலும் பாய்ச்சலுமாக நீர் நிர்வாகம் செய்வதால் வயலில் களைகள் அதிகம் வளர

வாய்ப்புள்ளது. எனவே சரியான களைக்கட்டுப்பாடு மிகவும் அவசியம் ஆகும். எனவே, விவசாயிகள் தகுந்த ரகங்களைத் தேர்வு செய்தல், சரியான பயிர் இடைவெளி, ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து நிர்வாகம், காய்ச்சலும் பாய்ச்சலுமான நீர் மேலாண்மை, கோனோவீடர் கொண்டு களை நிர்வாகம் போன்ற தொழில்நுட்பங்களை மேற்கொள்வதால் நெல் சாகுபடியில் அதிக விளைச்சலைப் பெறலாம் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வேப்பங்குளம் தென்னை ஆராய்ச்சி நிலையத்தில் விவசாயிகளுக்கு விளக்க பயிற்சி

பட்டுக்கோட்டை,: பட்டுக்கோட்டை அடுத்த வேப்பங்குளம் தென்னை ஆராய்ச்சி நிலையத்தில் தென்னை செயல் விளக்கம் மற்றும் பயிற்சி நடத்தப்பட்டது. தென்னை ஆராய்ச்சி நிலைய தலைவரும், பேராசிரியருமான ராஜேந்திரன் வரவேற்றார். தென்னை பற்றிய சிறப்புக் கருத்துக்காட்சி மற்றும் செயல் விளக்கங்களை விவசாயிகள் அனைவரும் பார்வையிட்டு பயனடைந்தனர். விவசாயிகளுக்கு தென்னை குறித்த முக்கிய செயல் முறைகளான வேர் மூலம் பூச்சி மருந்து மற்றும் தென்னை டானிக் செலுத்துதல், வாய்க்கால் அமைக்கும் கருவி, தென்னை மரம் ஏறும் கருவி, போர்டோ கலவை தயாரிக்கும் முறை ஆகியவை பற்றி செயல்முறை விளக்கமாக செய்து காண்பிக்கப்பட்டது.

பயிற்சியில் தென்னை மகத்துவம் மற்றும் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் குறித்து பட்டுக்கோட்டை வேளாண் அலுவலர் மாலதி விளக்கமளித்தார். ஓய்வுபெற்ற பேராசிரியர் சேகரன், இளநீர்காயை எளிதில் துளையிட்டு இளநீர் குடிக்கக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்ட கருவியைக் கொண்டு செயல்விளக்கம் செய்து காண்பித்தார். தென்னை விவசாயிகள் பயன்பெறும் வகையில் தென்னை விளைச்சலில் இடர்பாடுகளும், நிவர்த்தி முறைகளும் என்கிற தொழில்நுட்ப கையேட்டினை முன்னாள் தலைவர் நடராஜன் வெளியிட, பேராவூரணி அக்ரோ தென்னை உற்பத்தியாளர்கள் கம்பெனியின் இயக்குநர் பெற்றுக்கொண்டார். தென்னையில் உயர் தொழில் நுட்ப சாகுபடி முறைகள் பற்றி பேராசிரியர் மோகன்தாஸ் எடுத்துரைத்தார். பயிற்சியில் டெல்டா மார்ட் இயக்குநர், மேரிக்கோ நிறுவனம் கிருஷ்ணபிரதாப் மற்றும் திரளான தென்னை விவசாயிகள் கலந்து கொண்டனர். முடிவில் உதவி பேராசிரியர் (பயிர் நோயியல்) தங்கேஸ்வரி நன்றி கூறினார்.

## பட்டுக்கோட்டை வட்டாரத்தில் சம்பா தொகுப்பு திட்டப்பணி தீவிரம்

பட்டுக்கோட்டை, : பட்டுக்கோட்டை வட்டாரத்தில் சம்பா தொகுப்பு திட்டப் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின்கீழ் இயந்திரம் மூலம் விதைப்பு செய்யும் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.600 மானியம் வழங்கப்படுகிறது. இவ்வகை விதைப்பின் மூலம் நெல் முளைத்து வரிசைக்கு வரிசை 20 செமீ இடைவெளியும், செடிக்கு செடி 10 செமீ இடைவெளியும் உடையதாக அமையும். களை எடுக்கவும், பூச்சிமருந்து தெளிக்கவும், உரம் போடவும் மிக எளிதாய் இருக்கும். மானியம் பெற விவசாயிகள் உதவி வேளாண்மை அலுவலர்களை அணுகலாம் என்று பட்டுக்கோட்டை வட்டார வேளாண் இயக்குனர் (பொ) சாருமதி தெரிவித்துள்ளார்.

## நாகையில் நாளை நாட்டுக்கோழி வளர்ப்பு பயிற்சி

நாகை : நாகை கால்நடை மருத்துவமனை வளாகத்தில் செயல்பட்டு வரும் கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் நாட்டுக்கோழி வளர்ப்பு இலவச பயிற்சி வகுப்பு நாளை நடக்கிறது. இதில் நாட்டுக்கோழி இனங்கள், இடத்தேர்வு, கொட்டகை அமைக்கும் முறை, தீவன பராமரிப்பு, நோய் தடுப்பு, பண்ணை பொருளாதாரம் போன்ற தலைப்புகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சியில் கலந்து கொள்ள விரும்புவோர் நேரிலோ அல்லது 04365 247123 என்ற தொலைபேசி எண்ணையோ தொடர்பு கொண்டு தங்கள் வருகையை பதிவு செய்து கொள்ளலாம். இவ்வாறு கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய தலைவர் சீனிவாசன் தெரிவித்துள்ளார்.

## தென்னைமரம் ஏறும் பயிற்சி

போடி, : போடி அருகே பெண்கள் தென்னை மரங்களில் கருவி கொண்டு ஏறுவது குறித்து மாணவிகள் பயிற்சி அளித்தனர்.போடி அருகே புதுகுளத்தில் குள்ளபுரம் வேளாண்மை தொழில்நுட்ப கல்லூரி மாணவிகள் கார்த்திகா, முத்துமணி, வினோதினி, முத்துஅனிதா, ஹமாபிரியா, ராஜகாளீஷ்வரி, • மதி, கௌரி ஆகியோர் கிராம விவசாயிகளுக்கு தென்னை மரங்களில் கருவி கொண்டு மரம் ஏறும் பயிற்சியினை வழங்கினர். மேலும் கருவியை கொண்டு தென்னைமரத்தில் ஏறி செயல் விளக்கம் அளித்தனர்.இக்கருவி கொண்டு ஆண்களை தவிர

பெண்களும் மரம் ஏறலாம் இதன்மூலம் 30 அடி முதல் 40 அடி மரத்தில் ஏறி காய்களை பறிக்கலாம் என விளக்கம் அளித்தனர்.

## ஓணம் பண்டிகை தோவாளை பூ மார்க்கெட்டில் கேரள வியாபாரிகள் குவிந்தனர் : பிச்சி பூ கிலோ ரூ. 1250ஆக உயர்வு

ஆரல்வாய்மொழி: ஓணம் பண்டியையொட்டி தோவாளை மார்க்கெட்டில் பூக்கள் வாங்க கேரள வியாபாரிகள் குவிந்தனர். இதனால் விற்பனை சூடு பிடித்தது. பிச்சிப்பூ கிலோ ரூ. 400ல் இருந்து 1250 ஆக உயர்ந்தது. குமரி மாவட்டம் தோவளை பூ மார்க்ெகட்டிற்கு பக்கத்து ஊர்கள், வெளி மாவட்டங்கள் மற்றும் வெளி மாநிலங்களிலிருந்தும் பல வண்ண பூக்கள் வந்து குவிகின்றன. இங்கு வரும் பூக்களை உள்ளூர் பூக்கட்டும் தொழிலாளர்கள் முதல் வெளிமாவட்ட பூ வியாபாரிகள், வாசனை திரவியம் தயாரிக்கும் நிறுவனங்கள் உட்பட பலர் போட்டி போட்டு வாங்கி செல்கின்றனர்.

கடந்த வாரம் முதல் ஓண பண்டிகையை முன்னிட்டு தோவாளைக்கு கேரள பூ வியாபரிகளின் வருகை அதிகரித்துள்ளது. கேரளாவில் இன்று ஓணம் பண்டிகை கொண்டாடப்படுகிறது. இதனால் நேற்றுமுன்தினம் இரவு முதலே கேரளாவிலிருந்து பூவியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் வாகனங்களில் கூட்டம் கூட்டமாக வந்தனர். இரவு 11.30 மணியவில் தோவாளையில் பூ வியாபாரம் துவங்கியது. நேரம் செல்ல.. செல்ல.. ரோட்டின் இரு ஓரங்களிலும் கேளரளாவில் இருந்து வந்த வாகனங்கள் குவிந்தன. இதன் காரணமாக போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

தோவாளை மார்க்கெட்டில் நேற்றைய பூ விலை நிலவரம்: நேற்று முன்தினம் கிலோ ரூ. 450க்கு விற்ற பிச்சிப்பூ நேற்று ரூ. 1250 ஆக உயர்ந்தது, மல்லிகை கிலோ ரூ.300ல் இருந்து ரூ. 700க்கும், முல்லை ரூ. 400ல் இருந்து ரூ 1000க்கும், மஞ்சள்கேந்தி ரூ. 50ல் இருந்து கிலோ ரூ. 80க்கும், ஆரஞ்சு கேந்தி ரூ.60ல் இருந்து கிலோ ரூ. 150க்கும், வாடமல்லி கிலோ ரூ. 25ல் இருந்து ரூ.80க்கும், சம்பங்கி கிலோ ரூ. 80ல் இருந்து ரூ. 150க்கும், பட்டன்றோஸ் ரூ.110ல் இருந்து ரூ. 150க்கும் விலை உயர்ந்து விற்பனையானது.

மேலும் துளசி கிலோ ரூ. 25, தாமரை 1 பூ ரூ. 10, பச்சை ஒரு கட்டு ரூ. 8, கோழிப்பூ கிலோ ரூ. 60, சேலம் அரளி கிலோ ரூ 150, தோவாளை அரளி கிலோ ரூ. 200, பாக்கெட் ரோஸ் ரூ. 30, ஸ்டெம்ப் ரோஸ் ஒரு கட்டு ரூ. 200, மஞ்சள் செவ்வந்தி ரூ. 120, வெள்ளை செவ்வந்தி ரூ. 200 என விற்பனையானது. ஓணம் பண்டிகையை முன்னிட்டு தோவாளை சந்தைக்கு பூக்கள் வரத்து அதிகரித்திருந்தது. அதேநேரம் தேவையும் அதிகரித்ததால் பூக்கள் விலை உயர்ந்து காணப்பட்டது.